# நெய்தல்

1981 - 2006
SILVER JUBILEE YEAR

தாகுதி 04 எண் 01



கலை, கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை.
2006

# நெய்தல்

பிரதம ஆசிரியர்

வேலுப்பிள்ளை குணரத்தினம்

நிர்வாக ஆசிரியர்

செல்லையா சிவநாயகம்

ஆசிரியர் குழு

கலாநிதி செ.யோகராசா

வெ.அழகரத்தினம்

கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
2006

| | | |
|---|---|---|
| வெளியீடு | : | மார்கழி 2006 |
| தொடர்புகளுக்கு | : | **செ.சிவநாயகம்**<br>சமூக விஞ்ஞானத்துறை<br>கலை, கலாசார பீடம்<br>கிழக்குப் பல்கலைக்கழகம்<br>வந்தாறுமூலை, செங்கலடி. |
| தொலைபேசி | : | 065 - 2240583 |
| மின்னஞ்சல் | : | deanarts@yahoo.com |
| விலை | : | ரூ.100/= |
| அச்சுப்பதிப்பு | : | **சண் அச்சகம்**<br>இல.05, இருதயபுரம் மேற்கு,<br>மட்டக்களப்பு.<br>065-2222597 |

# இந்து அறிவியற்புலத்தில் மருத்துவஇயல் -ஒரு நோக்கு-

-சயனொளிபவன் முகுந்தன்-

**அறிமுகம் :**

இன்றைய காலகட்டத்தில் எத்துறைசார் அறிவும் விஞ்ஞானபூர்வமான அணுகுமுறையினையும் அறிவியற் கருத்துக்களின் செழுமையினையும் கொண்டமைய வேண்டியது எதிர்பார்ப்புக்குரியது. இந்துநாகரிப்புலத்தில் அண்டவியல் வானியல், இயற்பியல், இரசாயனவியல், மருத்துவம் போன்ற முறைசார் அறிவியற்புலங்களும் இரசவாதம், சோதிடம், குண்டலினியோகம், காயசித்தி உபாயங்கள் போன்ற முறைசாரா அறிவியற் புலங்களும் காலாதிகாலமாகக் காத்திரமான வளர்ச்சியைப்பெற்று வந்துள்ளன. அந்தவகையில் இந்துப் பண்பாட்டு வரலாற்றில் மருத்துவக்கலையின் மூலங்களை அடையாளங்காண்பதும் அம்மூலங்களிலிருந்து மருத்துவஇயல் பற்றிய இந்து சமூகத்தினரின் பாரம்பரிய சிந்தனைமரபைப் பற்றிய ஒருபரிமாணத்தைத் தரிசிக்க முயல்வதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பிணியினைப் போக்குதல் ஆரோக்கியம் காத்தல் என்பதனூடாக நீண்ட ஆயுளைத்தரவல்ல முறைமையால் இந்துக்களுடைய மருத்துவக் கலையானது ஆயுர்வேதம் என வழங்கப்பட்டது. பிற்காலத்தில் இது சித்தர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட முறைமையால் சித்த மருத்துவம் என்ற பெயருடன் தென்னாட்டில் பிரபல்யம் பெற்றது.

**வைதீகப்பாரம்பரியம் :**

இருக்குவேதத்தில் இடம்பெற்றுள்ள ஓஷதிசூக்தம் இந்துக்களின் மருத்துவ சிந்தனை மரபின் முக்கியமான ஆரம்ப நிலையாகும்... வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றையும் திரிதாது என ரிக்வேதம் சுட்டியுள்ளதுடன் கட்புலன், செவிப்புலன் குறைபாடுகளை நீக்கும் தேவ மருத்துவர்களாக அஸ்வினி குமாரர்களை அவ்வேதம் போற்றுகிறது.

சுக்கிலயசுர் வேதத்தில் குஷ்டம், இதயநோய், காசநோய், சித்தசுவாதீனம் ஆகிய பிணிகள் அவற்றுக்கான குணங்குறிகளுடன் தெளிவாக அடையாளங்காணப்பட்டுள்ளன. ஆயினும் இவற்றிற்கான சிகிச்சைகள் மருந்தளவிலன்றி மந்திர உச்சாடனங்களாகவே குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்து மருத்துவ வரலாற்றில் அதர்வவேதம் தனித்துவமான வகிபங்கைப் பெற்றுள்ளது. இதன் பேஷஜானிசூக்தானி, ஆயுஷ்யானிசூக்தானிப் பகுதிகள் மருத்துவ சிந்தனைகளை அதிகம் உள்ளடக்கியுள்ளன. ஒரு முழுமையான மருத்துவசாஸ்திரத்துக்கே உரிய பண்புகளோடு நோய் அறிகுறிகளை எடுத்துக்கூறி நோயைத் தெளிவாக அடையாளங் காணுகின்ற அதர்வவேத்தின் சில பகுதிகள் வியக்கத்தக்கன.

சூரியனின் அகஞ்சிவப்புக் கதிரகளுக்கு மஞ்சட்காமாலை நோயைக் குணப்படுத்துகின்ற ஆற்றல் உண்டென்பதனை இன்றைய மருத்துவ ஆராய்ச்சிகள் கண்டறிந்துள்ளன. அதர்வ வேதத்தில் மஞ்சட்காமாலை பற்றிய குறிப்புக்கள் இவ்வாறு அமைகின்றன

"இவன் நோய்நீங்கி மஞ்சளாகாமலிருக்க
நீண்டகாலம் வாழ உன்னைச் சிவப்புக்கதிர்களால் சூழ்கிறோம்
சூரியனை அனுசரித்து உனது இதயநோயும் காமாலையும் நீங்குக"[1]

பெரும்பாலான நோய்களுக்குக் காரணம் கட்புலனாகாத நோய்க்கிருமிகளே என்பதனை நுணுக்குக்காட்டிகள் கண்டறியப்படாத கிறிஸ்த்துவுக்கு முற்பட்ட சகாப்தத்திலேயே இவ்வேதம் உறுதிபடக் கூறியுள்ளது. அதர்வ வேதத்தின் 2ம் காண்டத்தின் 66ம், 67ம் சூக்தங்களாக அமையும் "கிருமிநாசம்"என்ற பகுதி இதற்குத் தக்க சான்று பகரும்.

மனித உடற்கூற்றியல் தொடர்பாகவும் குருதிச்சுற்றோட்டம் தொடர்பாகவும் துல்லியமான சில சிந்தனைகள் இவ்வேதத்தில் இடம்பெற்றுள்ளன. இதயத்திலிருந்து சுத்த இரத்தத்தை எடுத்துச்செல்லும் நாடிகளைப் பற்றியும் அசுத்தரத்தத்தை (ஒட்சியிறக்கப்பட்ட) இதயத்திற்கு எடுத்துவருகின்ற நாளங்களைப் பற்றியும் அதர்வ வேதத்தில் தெளிவாக வேறுபடுத்தி உரைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நாடிகளில் பாய்கின்ற பிரகாசமான சிவப்பு நிறமுடைய குருதி "அருணா" எனவும் நாளங்கள் தாங்கி வருகின்ற கருஞ்சிவப்பான குருதி "லோஹினி" எனவும் வேறுபடுத்தி அழைக்கப்படுகிறது. இவற்றில் பாய்கின்ற குருதியின் வேகம், நிறம் ஆகிய பண்புகளில் காணப்படும் தெளிவான வேறுபாட்டை இன்றைய உடற்கூற்றியலாளர்களும் வியக்கும் வகையில் அதர்வம் இனங்காட்டியுள்ளது.

"இப்புருடனில் துரிதமாயும் சிவப்பாயும்
சிவந்தும் கறுத்தும் கலங்கியும் நிதானமாயும்
மேலுங்கீழுமாய் குறுக்குமாகி அதிகம் பாய்ந்தோடும் நதியோட்டத்திற்கு
தனித்தனியோடும் நீர்களை எவன் செய்தான்"[2]

என்ற பாடற்பகுதியை இதற்கு உதாரணம் காட்டலாம். நோய்களிலிருந்து பாதுகாக்கவல்ல பலவகையான மருந்து வகைகளின் பெயர்களையும் இவ்வேதம் குறிப்பிட்டுள்ளது. அந்தவகையில் கருச்சிதைவைத் தடுக்க உதவும் பிருஷ்ணிபர்ணி என்ற பச்சிலை மருந்து (இது பிற்காலத்தில் சுஸ்ருதசம்ஹிதையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது) குஷ்டரோகத்தை நிவர்த்தி செய்யவல்ல இரஜனீ என்ற மருந்து, தலைவலி மற்றும் கபாலத்துடன் தொடர்புடைய வலிகளைச் சீர்செய்யவல்லதான கர்ணசூலம் என்ற ஔடதம், வெண்குஷ்டத்திற்கு மருந்தாகும் ஆஸுரியின்செடி போன்ற மூலிகை மருந்துகளை எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்.[3] மேலும் இவ்வேதத்தின் 108ம் சூக்தம் விடமுறிவுச் சிகிச்சை பற்றி விரிவாகப் பேசுகிறது. வாரணாவதி என்ற ஔடதமும் அபஸ்கம்பம் என்ற மூலிகையும் விடமுறிவை ஏற்படுத்தக்கூடியன என்பதையும் அதர்வம் சுட்டிக் காட்டியுள்ளது.

எல்லோருக்கும் புரிந்துவிடக்கூடாது என்பதற்காகவே திட்டமிட்டுப் பிரயோகிக்கப்பட்டுள்ள சங்கேத மொழிகளும் குழூக்குறிகளும் விடுகதை போன்ற பாடல்களும் இவ்வேதத்தில் ஆழ்ந்துகிடக்கும் மருத்துவ உண்மைகளை முழுமையாக வெளிக்கொணரமுடியாது அரண் செய்கின்றன. எவ்வாறாயினும் இந்துக்களால் வளர்த்தெடுக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவக்கலையின் ஆழமான ஆரம்பநிலைப் போக்குகளை அதர்வ வேதத்தில் அடையாளங்காண முடிகிறது.

**ஆயுர்வேதம் :**

அதர்வ வேதத்தின் கிளையாகவே அமையப்பெற்ற ஆயுர்வேதமானது ஆரம்ப காலத்தில் 1,00,000 சுலோகங்களையும் 1000 அத்தியாயங்களையும் உடையதாய் தோன்றியது என்பது நம்பிக்கை. ஆயினும் அது மனித அறிவிற்கு ஏற்றவகையில் 10,000 சுலோகங்களாகச் சுருக்கப்பட்டது. கி.மு. 800க்குப் பின்பு ஆத்திரேயர், தன்வந்திரி ஆகிய இரண்டு ஞானிகள் ஆயர்வேத மரபினை செழுமைப்படுத்தியவர்களாக அறியப்படுகின்றனர்.

**ஆத்திரேயர் மரபு :**

ஆத்திரேயர் 46,500 சுலோகங்களைக் கொண்ட ஆயர்வேத நூலொன்றை இயற்றியதாகவும் இவரது சீடர்களான அக்கினிவேசர், பெல, ஜடகர்ண, பராசர, ஹரித, காரபாணி ஆகியோரும் தனித்தனியான நூல்களை இயற்றியதாகவும் அறியப்படுகிறது. இவர்களுள் அக்கினிவேசர் இயற்றிய நூல் மட்டுமே கிடைத்துள்ளது. இவருடைய நூலைத் தழுவியே பிற்காலத்தில் சரகசம்ஹிதையைத் தான் இயற்றியதாகச் சரகர் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. அக்கினிவேசர் தவிர்ந்த ஏனையோரின் நூல்கள் மறைந்துவிட்டபோதும் அவற்றின் தொகுப்பாகவே தமது அட்டாங்கஹ்ருதயசம்ஹிதை என்ற நூல் அமையப்பெற்றதாக சிங்ஹகுப்த சேனாவாகப்பட்டர் குறிப்பிட்டுள்ளார்.

**தன்வந்திரி மரபு :**

தன்வந்திரியாரே ஆயர்வேதத்தினை எட்டுப் பிரிவுகளாகப் பிரித்து வளர்த்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அவையாவன-

**1. காயசிகிச்சை, 2. பாலசிகிச்சை** (குழந்தை வைத்தியம்), **3. கிரகசிகிச்சை** (மனநல மருத்துவம்) **4. சாலாக்யதந்திரா** (கண், காது, மூக்கு, தொண்டை), **5. சல்யதந்திரா** (அறுவைச்சிகிச்சை), **6. விஷதந்திரா** (விடமுறிவு மருத்துவம்), **7. இரசாயனதந்திரா** (மூப்பியல்), **8. வாஜிகரணதந்திரா** (ஆண்மலடு, அலித்தன்மை, கருவளர்ச்சிக்கான சிகிச்சை) என்பனவாகும். தன்வந்திரியாரே சிகிச்சாதத்துவ விஞ்ஞானம்., சிகிச்சாதர்சனம், சிகிச்சாகௌமுதி ஆகிய ஆயர்வேத நூல்களையும் இயற்றியதாக அறியப்படுகிறது.[4]

ஆயினும் இந்நூல்கள் கையளிப்புப் பாரம்பரியத்தில் உள்ள குறைபாட்டால் என்றோ அழிந்து போயின. தன்வந்திரியே ஆயுர்வேதத்தில் சத்திரசிகிச்சை முறைமையின் முன்னோடியாகவும் கருதப்படுகிறார். இவர் மனிதருக்கு உண்டாகும் நோய்களை ஆதி ஆத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்வீகம் என 3 வகையாக இனங் காட்டியுள்ளார்

1) **ஆதிஆத்மிக நோய்கள் -** உடல், மனம் சம்பந்தப்பட்டவை இவை பரம்பரையாக ஏற்படலாம் கருவில் இருக்கும்போது ஏற்படும் அதிர்ச்சிகளால்,குறைபாடுகளால் ஏற்படலாம். உடல்நோய்கள் பெரும்பாலும் வாதம், பித்தம், கபம் ஆகிய 3 தோஷங்களால் தோன்றுகின்றன மனநோய்கள் பெரும்பாலும் ராஜசம், தாமசம், சாத்விகம் ஆகிய முக்குணங்களில் ஏற்படும் சமநிலைக் குழப்பத்தாலும் குறிப்பாக ராஜசம்,தாமச குணங்கள் மேலோங்குவதால் உண்டாகின்றன.

2) **ஆதிபௌதிக நோய்கள்-** சூழ்நிலை நெருக்கடிகளால் தோன்றுவன. உள்வெளிக் காயங்கள், விஷஜந்துக்கள் ஆகியவற்றால் ஏற்படுகின்றன.

3) **ஆதிதெய்விகம் -** மூன்று பிரிவுகளை உடையது.

- காலப்பிரவர்த்தம் - காலநிலை மாற்றங்களால் உருவாகும் நோய்கள்
- தெய்வபலப்பிரவர்தம் - மனிதசக்திக்கு அப்பாற்பட்டவை
- சுபாவபலப்பிரவர்த்தம் - உடலின் இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்களால் உண்டாவன.

**சரகசம்ஹிதை :**

சரகர் எனும் ஞானியால் கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்தில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் ஆயுர்வேத மருத்துவ நூல் இதுவாகும். இந்த நூலானது அதன் விடய மகத்துவம் கருதி பாரசீக, அரபி, இலத்தீன் மொழிகளில் கி.பி. 1ம் நூற்றாண்டில் மொழி பெயர்க்கப்பட்டது.

சரகசம்ஹிதை 120 அத்தியாயங்களை உடையது. அவை சூத்திரஸ்தானம், நிதானஸ்தானம், விமானஸ்தானம், சரீரஸ்தானம். இந்திரியஸ்தானம், சிகிட்சாஸ்தானம் கல்பஸ்தானம், சித்திஸ்தானம் என எட்டுப்பகுதிகளாக வகையீடு செய்யப்பட்டுள்ளன. முப்பது அத்தியாயங்களை கொண்ட சூத்திரஸ்தானத்தில் மருத்துவத்திற்கான பொது விதிகள் பற்றிப் பேசப்பட்டுள்ளது. நிதானஸ்தானத்தில் 8 அத்தியாயங்கள் உள்ளன. இப்பகுதியில் நோயை இனங்கண்டறிதல் பற்றிய பலவிடயங்கள் பேசப்பட்டுள்ளன. விமானஸ்தானமானது 8 அத்தியாயங்களை உடையது. உணர்வு, தொடுகை, ருசி பற்றிய விடங்களை இப்பகுதி குறிப்பிடுகிறது.[5]

சரீரஸ்தானம் என்ற பகுதியிலும் 8 அத்தியாயங்கள் உள்ளன. உடற்கூற்றியலைப் பற்றியும் கருவளர்ச்சி, பிரசவம் பற்றியும் இதில் விரிவானகுறிப்புக்கள் உண்டு. இந்திரியஸ்தானம் 12 அத்தியாயங்களைக் கொண்டு விளங்குகிறது. வருமுன்காத்தல் என்ற அடிப்படையில் சுகாதாரத்துடன் தொடர்புடைய பலவிடயங்கள் பேசப்பட்டுள்ளன.

சிகிச்சாஸ்தானம் என்ற பகுதியே உள்ளடக்கத்தால் பெரியது. இதில் 30 அத்தியாயங்கள் உள்ளன. நோய்களுக்கான சிகிச்சை முறைகள் பற்றிய ஆழமான விவரணங்கள் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. பன்னிரண்டு அத்தியாயங்களை உடைய கல்பஸ்தானத்தில் மருந்துகளின் வகைகள், அவற்றை உருவாக்கும் முறைகள், அளவீடுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதிப் பகுதியான சித்திஸ்தானத்திலும்

12 அத்தியாயங்கள் உள்ளன. இப்பகுதியில் பக்கவிளைவுகள், ஒவ்வாமை பற்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை நயக்கத்தக்கதாகும்.

மனித உடலானது கோடிக்கணக்கான கலங்களால் ஆனது என்பதனை அன்றே கூறியுள்ள சரகசம்ஹிதை அக்கலங்கள் பஞ்சபூதங்களால் உருவானது எனவும் 7 வகையான திசுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடுகின்றது. **ரசம்** (பிளாஸ்மா), **மாமிசம்** (தசைகள்), **மேதஸ்** (கொழுப்பு), **அஸ்தி** (எலும்பு), **மஜ்ஜா** (என்புமஜ்ஜை), **ரத்தம்** (அணுக்கள்), **சுக்லம்** ஆகியனவே அவ்வேழுமாகும். இவ்வேழுவகையான திசுக்களுக்கும் சாரமாக உள்ளது **ஓஜஸ்** என்ற பொருளாகும்.

ஜீரணத்தின்போதும் வளர்சிதை மாற்றங்களின் பொழுதும் வாதம், பித்தம், கபம் ஆகிய முத்தோசங்களும் வேறுசில உபதாதுக்களும் கழிவுப்பொருட்களும் உண்டாகின்றன இச்செயற்பாடுகள் ஒருசமநிலையில் நடைபெறுகின்றன. அச்சமநிலை குழம்புகின்ற சந்தர்ப்பங்களில் நோய்கள் உண்டாகின்றன எனச் சரகசம்ஹிதை குறிப்பிடுகிறது.[6]

வாதம் காரணமாக 80 விதமான நோய்களும் பித்தம் காரணமாக 40 நோய்களும் கபம் காரணமாக 20 விதமான நோய்களும் உண்டாகின்றன. இவை மட்டுமன்றி பிராணன், உதானன், சமானன், வியானன், அபானன் என்ற 5 விதமான வாயுக்களின் வரிசை மாற்றம், சேர்க்கை ஆகியவற்றின் விளைவாக 62 விதமான நோய்கள் உண்டாகும் எனச் சரகர் குறிப்பிட்டுள்ளார்

இவற்றுள்ளே பிரதானமான 149 நோய்கள் பற்றிய விரிவான தகவல்கள் சரகசம்ஹிதையில் இடம்பெற்றுள்ளன. அவற்றுக்கான சிகிச்சைக்குப் பயன்படக்கூடிய 341 தாவர மூலிகைகள் பற்றியும் விலங்குகளிலிருந்து பெறப்படும் 177 மருந்துகள் பற்றியும், 64 விதமான கனிமப் பொருட்கள் பற்றியும் மிக விளக்கமாகச் சரகசம்ஹிதை குறிப்பிட்டுள்ளது.

### சுஸ்சுருதசம்ஹிதை :

ஆயர்வேத மருத்துவக்கலையின் சத்திரசகிச்சை முறைமைகள் பற்றி வெளிவந்த மிகத்தெளிவான மருத்துவக் கையேடாக சுஸ்சுருதசம்ஹிதை திகழ்கிறது. இதனுடைய காலம் கி.மு.1000 ஆக இருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் ஊகமாகும். ஸுத்திரஸ்தானம் நிதானஸ்தானம், சரீரஸ்தானம், கல்பஸ்தானம், சிகிச்சாஸ்தானம், உத்தரஸ்தானம் என ஆறு பகுதிகளைக் கொண்டது. இவற்றுள் உத்தரஸ்தானம் பிற்சேர்க்கையாகும் ஸுத்திரஸ்தானத்தில் 46 அத்தியாயங்கள் அமையப்பெற்றுள்ளன. இப்பகுதி சிறப்பாக அறுவைச்சிகிச்சை பற்றிப் பேசுகின்றது.அறுவைச்சிகிச்சை பற்றிக்கற்கின்ற மாணவர்கள் முதலில் மனித உடற் கூற்றியலைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும்.எனவே இறந்த உடல்களை அறுத்துச் செய்யப்படும் சோதனைகள் இன்றியமையாதவை என்பதனை மிகவும் அழுத்தமாகச் சுஸ்சுருதர் கூறியிருக்கிறார். மேலும் சத்திரசிகிச்சைக்கு முன்பு நோயாளியை உணர்வு மறக்கச் செய்வதற்கான உபாயமாக மதுவை அருந்த வைத்தல் இன்றியமையாதது என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகின்ற 101 வகையான கருவிகள் பற்றியும் அவற்றின் அமைப்புமுறைகள் பற்றியும் சுஸ்சுருதசம்ஹிதையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உடலில் உள்ளே பொதிந்துவிட்ட அந்நியப் பொருட்களை வெளியேற்ற மருந்துகளை உள்ளே செலுத்த உதவும் குழல்கருவிகளைப் பற்றியும் குத்துவதற்கும் துளைபோடுவதற்கும் சுரண்டுவதற்கும் தைப்பதற்கும் உதவுகின்ற கூர்மையான கருவிகளைப்பற்றியும் தெளிவான குறிப்புக்கள் இந்நூலில் விரவியுள்ளன.[7]

சத்திர சிகிச்சைக்குப் பின்பு கட்டுப்போடுவது முக்கியமான விடயமாகும். அவ்வாறான 14 விதமான கட்டுக்களை பற்றியும் அவற்றிற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய பொருட்கள் பற்றியும் சுஸ்சுருதர் கூறியுள்ளார். மேலும் இப்பகுதியில் அறுவைச்சிகிச்சை செய்யமுன்பு காரப்பொருள் அல்லது நெருப்பினால் சூடுபோடுவது, கெட்ட இரத்தத்தை வெளியேற்ற அட்டைகளைக் கடிக்கவிடுவது போன்ற செயல்முறைகளும் விளக்கப்பட்டுள்ளன. எட்டுவிதமான அறுவைச்சிகிச்சை முறைகள் பற்றியும் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நிதானஸ்தானம் 16 அத்தியாயங்களை உடையது. நோய்களின் அறிகுறி அவை தோன்றுவதற்கான காரணங்கள் நோய்வகைகள் அவற்றின் இலக்கணங்கள் பற்றி இங்கே விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. ஆயுர்வேத மருத்துவக்கலையின் அடிப்படையைக் கற்க விரும்புவோருக்கான பாடவிதானமாக இதனைக் கருதலாம்.

பத்து அத்தியாயங்களைக் கொண்டதாகச் சரீரஸ்தானம் விளங்குகிறது. இப்பகுதியில் சிறப்பாகத் தாய்சேய் மருத்துவம், பற்றிச்சிலாகித்துப் பேசப்படுகிறது. கருவுருவாகும் வழிமுறைகள், கருச்சிதைவு ஏற்படாது தடுக்கும் வழிமறைகள் பற்றி இவ்வத்தியாயத்தில் குறிப்புக்கள் உள்ளன. சிகிச்சாஸ்தானம் 40 அத்தியாயங்களை உடையது. இரசாயனவாஜீகரண சிகிச்சை முறைகள் பஞ்சகர்மாமுறை போன்றவை இப்பகுதியில் ஆராயப்பட்டுள்ளன. வாதநோய், குட்டநோய், நீரிழிவு, அக்கி, விதைவீக்கம் கட்டிகள் போன்றவற்றுக்கான சிகிச்சை முறைகளும் சிகிச்சாஸ்தானத்தின் முதல் இருபது அத்தியாயங்களில் விபரிக்கப்பட்டுள்ளன.

இருபத்து இரண்டாம் அத்தியாயத்தில் உதடு, நாக்கு, தொண்டை, பல் ஆகியவற்றில் தோன்றும் நோய்களுக்கான சிகிச்சை முறைகள் பற்றி விபரிக்கப்படுகின்றன. வாய் துர்நாற்றம், முரசுகரைதல் பற்சூத்தை, வரிசையின்றிப் பல் முளைத்தல், உள்நாக்கு வளர்தல் போன்றவற்றுக்கான சிகிச்சை முறைகளும் இவற்றில் உள்ளடக்கம். மனிதர்கள் நீண்ட ஆயுளும் ஆண்மையும் பெற்று வாழ்வதற்கான காயகல்பங்கள் பற்றிய விபரங்கள் 26-30 வரையிலான அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளன. 31–40 அத்தியாயங்களில் இன்றைக்கு மேல்நாடுகளிலும் பிரபல்யமாகியுள்ள ஆயுர்வேத சிகிச்சை முறையான பஞ்சகர்மா முறை பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியிலே மனித உடலில் அறுவைச் சிகிச்சை செய்யக்கூடிய 27 இடங்களையும் அதற்குப் பயன்படுத்தக்கூடிய 6 வகையான உபகரணக் கூட்டங்களையும் சுஸ்ருதர் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார். சிறுநீரகக்கல், பிஸ்டுலா எனப்படும் ஆசனவாயிலிலுள்ள முளை, மூலநோய், பிரசவ அறுவைச்சிகிச்சை (சிசேரியன்) ஆகிய அறுவைச்சிகிச்சைகளும் இவற்றுள் உள்ளடக்கம் என்பதும் இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

**தென்னாட்டில் மருத்துவப் பாரம்பரியம் :**

சங்ககாலத்திலும் மூலிகை வைத்தியம் பற்றிய அறிவு நன்கு பரவியிருந்தது என்பதற்குச் சங்க இலக்கியங்களே சான்றாகின்றன. புறநானூற்றில் உடல் முழுவதும் விழுப்புண் பெற்றிருந்த வீரனின் உடலானது மக்களால் மருத்துவப்பயன்பாட்டிற்காக வெட்டப்பட்ட மூலிகைமரம் போலக் காட்சியளிப்பதாக பாடற்குறிப்பொன்று உள்ளது.

"மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி"

புறநானூறு 180

மருத்துவன் தனது அறிவைச் சமூகப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்த வேண்டுமே அன்றி குறுகிய தன்னலசிந்தை உடையவனாகத் தனது வித்தையைக் கரந்துவைத்தல் சமூகத் துரோகம் எனக் கலித்தொகை வலியுறுத்தியுள்ளது.

"வருந்திய செல்லல் தீர்த்த திறனறி யொருவன்
மருத்தறை கோடலின் கொடிதே"

வீரயுகமான சங்ககாலத்தில் போர்கள் மனித வாழ்வின் தவிர்க்கமுடியாத பகுதியாயின. இப்போர்களிலே அடையும் விழுப்புண்களுக்கான சத்திரசிகிச்சை முறைகள் பற்றிய அறிவை அக்காலச்சமூகம் பெற்றிருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக "சிரல் பெயர்ந்தாற் போல நெடுவள்ளுசி" கொண்டு மார்பிலேற்பட்ட விழுப்புண்ணைத் தைத்தமை பற்றிப் பேசுகின்ற பதிற்றுப்பத்துபாடலைக் குறிப்பிடலாம். இக்காலத்தில் புகழ்பெற்ற மருத்துவர்கள் பலர் இருந்திருப்பர். ஆயினும் மருத்துவன் தாமோதரனார் என்பவர் ஒரு புலவராயும் இருந்த காரணத்தினால் அதிகமாக அறியப்படுகிறார். பிற்காலத்தில் திருக்குறளில் திருவள்ளுவர் "மருந்து"என்கிற அதிகாரத்தையே அமைத்துள்ளமை கவனிக்கத்தக்கது

கி.பி.5ம் நூற்றாண்டு தொட்டுப் பல்லவராட்சிக் காலத்தின் இறுதிவரை (கி.பி. 9ம் நூற்றாண்டு) தென்னாட்டில் நடைமுறையில் இருந்த இந்து மருத்துவப் பாரம்பரியத்தை அறிந்து கொள்வதற்கான மூலங்களாகப் பல்லவர் காலத்துக்குரிய கல்வெட்டுக்களையும் இலக்கியங்களையும் கொள்ளலாம். பல்லவ மன்னர்களால் அக்காலத்து மருத்துவர்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட நிலங்கள் **மருத்துவப்பேறு** எனக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டன. மூலிகைககளின் பெறுமதி உணரப்பட்ட காரணத்தால் அவற்றைப் பயிரிடுவோர் அரசாங்கத்திற்கு வரிசெலுத்தப்படவேண்டியவராயினர். எடுத்துக்காட்டாக **கருசலாங்கண்ணி** என்ற மூலிகையைப் பயிரிடுவோர் **கண்ணீட்டுக்காணம்** என்ற வரியையும் செங்கொடிவேலி, சித்திரமூலம் என்கிற பெயர்களால் அழைக்கப்படுகின்ற மூலிகைக் கொடியைப் பயிரிடுவதற்காக **செங்கொடிக்காணம்** எனப்படுகின்ற வரியையும் அரசாங்கத்திற்குச் செலுத்தினர் என்பதனைப் பல்லவர்காலக் கல்வெட்டுக்களினூடாக அறியமுடிகிறது.[8]

மேலும் பல்லவர் காலத்தில் **பாகூர், சோழிங்கூர், காஞ்சிபுரம்** ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட **கடிகை** எனப்படுகின்ற புகழ்பெற்ற கல்லூரிகளில் **சரகசம்ஹிதை, அஷ்டாங்கஹ்ருதயம், சுஸ்சுருதசம்ஹிதை** ஆகிய ஆயுர்வேத சாஸ்திரங்களும்

கற்பிக்கப்பட்டதைச் சாசனச் செய்திகள் உறுதி செய்கின்றன. பக்தி இயக்கம் தொழிற்பட்ட பொழுது சைவநாயன்மார் புரிந்த சமூகத் தொண்டுகளில் மருத்துவ சேவையும் ஒன்றாகும். வெப்பு நோயைத் தீர்த்தலையும் விடமுறிவு செய்தமையையும் வெறுமனே அற்புதங்கள் என்ற அளவில்மட்டும் நோக்குவது தவறாகும். கண்ணப்பர் வரலாற்றினூடாக மூலிகை மருத்துவமும் **ஊனுக்குஊன்** என்ற மருத்துவ விதிமுறையும் (கண்ணிற்குகண் அப்புதல்) அக்கால சமூகத்தின் அறிவிற்கு அப்பாற்பட்ட விடயங்களல்ல என்பதை உணரமுடியும்

**" வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால்**
**மாாளாத காதல் நோயாளன்............."**

என்கிற குலசேகராழ்வாரின் வரிகளினூடாகப் பல்லவர்காலச் சமூகத்தில் அறுவைச் சிகிச்சை முறைகள் வழக்கத்தில் இருந்தன என்பதை ஊகிக்க முடிகிறது.

சோழ சாம்ராஜ்யம் தென்னாட்டில் நிறுவப்பட்டபொழுது இந்துக்களின் பாரம்பரிய மருத்துவ அறிவும் மிகக் கச்சிதமாக நிறுவனமயப்படுத்தப்பட்டது. திருக்கோயில்கள் ஊடாக நிர்வாகம் நடத்துவதில் கைதேர்ந்தவர்களான சோழர்கள் மருத்துவ சாலைகளையும் கோயில்களை அண்டியே நிறுவியிருந்தனர். **சுந்தரசோழன் ஆதுலர்சாலை** என்ற பெயரில் தஞ்சைப் பெரியகோயிலுடன் இணைவுபெற்ற மருத்துவசாலை ஒன்றைக் குந்தவை நிறுவியிருந்ததாக 1ம் இராசேந்திர சோழனின் 3ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இதுதவிரவும் திருமுக்கூடல் என்ற இடத்தில் உள்ள திருமால் ஆலயத்தில் **வீரசோழன்** என்ற பெயருடைய மருத்துவசாலை ஒன்று நிறுவப்பட்டிருந்தமை பற்றிச் சாசனக் குறிப்புக்களால் அறியமுடிகிறது. பதினெட்டுப் படுக்கைகளைக் கொண்டதாக அறியப்படுகின்ற இதனை வீரராஜேந்திரசோழன் நிறுவியதாகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. **சல்லியக்கிரியை செய்வோன் (அறுவைச்சிகிச்சை), பரியாரம் செய்வோன் (அறுவைச் சிகிச்சைக்கு ஒத்தாசை புரிவோன்), மருந்திடும் பெண்கள், மூலிகை சேகரிப்போர், ஈரங்கொல்லி (சுத்திகரிப்புத் தொழிலாளர்), திருமெய்காவல்** ஆகிய ஊழியர்கள் அங்கே பணியாற்றினர் என்பதனைக் கல்வெட்டுச் செய்திகள் மூலம் அறியமுடிகிறது.[9]

மருத்துவர்கள் அரசாங்கத்தின் போஷிப்பைப் பெற்றிருந்தமைக்கும் சான்றுகள் உள்ளன. விடமுறிவு மருத்துவர்களுக்கு **விடிஹரபோகம், மருத்துவப்பேறு** ஆகிய பெயர்களில் மானியம் வழங்கப்பட்டதனை உத்தரமேரூர் கல்வெட்டிலிருந்து அறிய முடிகின்றது.

## சோழர்காலத்தில் பாவனையில் இருந்த ஆயுர்வேத மருந்துகள் :

வீரசோழன் மருத்துவசாலையில் ஒரு வருடத்திற்குத் தேவையான மருந்துகளின் பட்டியல் கல்வெட்டில் பதியப்பெற்றுள்ளது. அவற்றுள் பிராஹ்மியம், வாசஹரிதகி, தஸமூலஹரிதகி ஹேரண்டதைலம், பஞ்சாகத்தைலம், லசுநாதியேரண்டதைலம், மண்டூரவடாகம் வஜ்ரகல்பம் உத்தமகர்ணாதித்தைலம் சுநேத்ரி விமலை தம்ராதி கல்யாணலவணம் பில்வாஹரிதகி கண்டிரம் திரவத்தி பலா கடும்பூரி என்பன வாசித்தறியப்பட்ட மருந்துகளாகும்.

| வடமொழி | தமிழ்-வழக்கு |
|---|---|
| வாச | ஆடாதோடை |
| ஹரிதகி | கடுக்காய் |
| தஸமூலம் | தசமூலம் |
| பலா | சித்தாமுட்டி |
| லசுநா | உள்ளி |
| ஏரண்ட | சித்தாமணக்கு |
| பில்வ | கூவிளை-வில்வம் |
| மண்டூர | இரும்புத்துாள்(கிட்டத்துாள்) |
| பல்லாதக | செங்கோட்டை |

(ஒருமருந்தில் இடம்பெற்றுள்ள பிரதான மூலிகையின் பெயரைக்கொண்டே அம்மருந்திற்குப் பெயரிடுவது ஆயுர்வேதமரபாகும். இதுமட்டுமல்லாது ஒன்றுக்கு மேற்பட்ட பிரதான மூலிகைகள் சேர்க்கப்படும்பொழுது ஒரு மூலிகையின் பெயருடன் ஆதி என்ற தொடரையும் இணைத்துப் பெயர் சுட்டப்படுவதுமுண்டு.) [10]

சோழர்கால இலக்கியங்களுள் ஒன்றான கம்பராமாயணத்தில் விபீடணன் கூற்றாக அமையும் பின்வரும் பாடல்வரிகள் கவனிக்கப்படவேண்டியன.

**‘ உடலிடைத் தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் போக்கி**
**சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினார் துயரம் தீர்வர் ’**

அறுவைச்சிகிச்சையின் படிநிலைகளை இவற்றினிடையே கம்பன் அநாயாசமாகக் கூறிச் சென்றிருப்பது நயக்கத்தக்கது.

விஜயநகர நாயக்கர் காலத்திலும் இந்து மருத்துவப் பாரம்பரியம் தனித்துவமான வளர்ச்சியினைப் பெற்றிருந்தது. ஸ்ரீரங்கம் கோயிலில் புகழ்பெற்ற மருத்துவமனை ஒன்று நிறுவப்பட்டிருந்தது என்பதையும் அங்கே ஆயுர்வேதத்தின் ஆதர்சபுருஷராகக் கருதப்படும் தன்வந்திரியாருக்குக் கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது என்பதனையும் சாசனங்களுடாக அறியமுடிகிறது. இக்காலத்தில் தோன்றிய ஆதீனங்களும் தமது சமூகந் தழுவிய சேவைகளுள் ஒன்றாக மருத்துவ சேவையையும் ஆற்றிவந்தன.

### சித்த மருத்துவத்தின் தனிச்சிறப்பு :

இந்துப் பண்பாட்டு மரபில் சித்தமருத்துவம் தனித்துவமான முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. ஆயுர்வேத மருத்துவ முறைமைகளுடன் பலநிலைகளில் சித்தமருத்துவம் ஒற்றுமைப்பட்டு நிற்கின்ற போதிலும் குறிப்பாக உலோகவகைகள் இரசவர்க்கங்கள் போன்றவற்றைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தும் முறைமைகளால் இது தனித்துவம் பெற்று விளங்குகிறது. (***“The therapeutic of Siddha medicine consists mainly of the use of metals and minerals, where as in the earlier Ayurvedic texts there is no mention of metals and minerals .In the Siddha texts from the times Mecury, Sulphur, Copper, Arsenic& variety of Other metals and minerals figure prominently as the therapeutic agents.”*-DR.Narayanaswami**) [11]

சித்தமருத்துவமானது பொதுவாக முப்பெரும்பிரிவுகளில் செயற்படுத்தப்படும். அவையாவன:

1. **தேவமருத்துவம் -** இரசம், பாடாணம், கந்தகம், உப்பு உலோக வர்க்கங்களால் சித்தமருத்துவ முறைப்படி தயாரித்த கட்டு, மாத்திரை, களங்கு, பற்பம், சிந்தூரம் போன்ற வகையறாக்களால் மேற்கொள்ளப்படுவது.

2. **மனிதமருத்துவம்-** தாவர-மூலிகைகளால் செய்யப்பட்ட குடிநீர், சூரணம், இரசம், பிட்டு, வடகம், இளகம், மாத்திரைகள் கொண்டு மேற்கொள்ளப்படுவது.

3. **ராஜச மருத்துவம்-** சூடுபோடுதல், அட்டை விடுதல், சலாகைபோடுதல், கொம்பு கட்டுதல், இரத்தம் வாங்குதல் ஆகிய முறைகள்

நோயாளியைப் பரிசோதித்தல், நோயை இனங்காணுதல், சிகிச்சையளித்தல் எனத் திட்டமான ஒழுங்குமுறைகளைச் சித்தமருத்துவம் கடைப்பிடித்துவந்துள்ளது. நோயாளியைப் பரிசோதித்தல் என்ற வகையில் அவரின் நாடித்துடிப்பு, உடல் வெப்பநிலை, சிறுநீர், மலம், நாக்கு, கண்கள், தொனி, நிறம் ஆகியவற்றைப் பரிசோதிக்கும்படி சித்த மருத்துவம் அன்றே அறிவுறுத்தியுள்ளது.

**“நயமுறு வாகடத்தோர் கைநாடியை நன்நாவை**
**வியனுறு கண்ணை மெய்யின் பரிசத்தை நிறத்தை மெய்யை**
**செயமுறு மலசலத்தை செப்பிய சத்தந்தன்னைப்**
**பயமறத் தெளிந்திவ் எட்டும் பார்ப்பது பண்புதானே”**

அங்காதிபாதம் நாடிப்பரிசோதனை

வாதம், பித்தம், கபம் ஆகிய முத்தோசங்களும் நாடித்துடிப்பில் பிரதிபலிப்பதனால் நாடிப்பரிசோதனை சித்த மருத்துவத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. நாடியைத் தொட்டுணர்வதற்கு உடலில் 10 இடங்கள் திருமூலரால் அடையாளங்காட்டப்படுகின்றன.

**“ தாதுமுறை கேள்தனித்த குதிச்சந்து**
**ஓதுரு காமியம் உந்தி நடுமார்பு**
**காது நடுமூக்கு கண்டம் கரம் புருவம்**
**போதுறு உச்சிபுகல் பத்தும் பார்த்திடே”**

என்ற வகையில் நாடித்துடிப்பை உணர்வதற்கு குதிச்சந்து காமியம் உந்தி நடுமார்பு காது நடுமூக்கு தொண்டை(கண்டம்) கரம் புருவம் உச்சி ஆகிய 10 இடங்கள் திருமூலரால் சுட்டிக்காட்டப்படுகிறது. மணிக்கட்டில் இது இலகுவாக உணரப்படக்கூடியது. மணிக்கட்டில் 3 விரல்களை வைத்து பெருவிரலின் கீழ் வாதமும் நடுவிரலில் பித்தமும் இடது விரலில் சிலேத்துமமும் உணரப்படும்.[12]

நாடிகள் இயங்கும் பாங்கினை மயில், அட்டை, ஓணான், தவளை, பாம்பு, விட்டில் போன்ற உயிரினங்களின் அசைவினை உவமையாகக் கொண்டு விளக்குவதும் சித்த மருத்துவ மரபாகும்..

“ அன்னமே கோழி ஓணான் முயல்என நடக்கில் வாதம்
பின்னையோர் ஆமை அட்டைபெயர்திடில் பித்தம் என்ப
சொன்னதோர் விழிமடந்தாய் துலங்கிய தவளை பாம்பு
முன்னமே மையமென்றும் மொழிந்தனர் நாடிதானே”

காரிளம் மாதா பிள்ளை கர்ப்பமே முற்றி நின்றால்
கூரியவாதநாடி குண்டல குழப்போல் பாயும்
வீரிய மூன்றாம் திங்கள் விட்டில்போல் பதைத்துநிற்கும்
பாரிவை எட்டாம் திங்கள் பையவே புழுப்போல்ஓடும்”

குணபாடம் நோயை இனங்காணுதல்

சரீரத்துக்கு ஏற்படும் நோய்களை சித்தமருத்துவம் 4448 என அடையாளங் கண்டுள்ளது.

“ நாமப்பா அப்படியே நிசமாய்ச் சொன்னோம்
நாலாயிரத்துநானூற்று நாற்பத்தெட்டே”

அகத்தியர்வைத்தியகாவியம் 1500

இந்நோய்களை கழிச்சலென்ற திராணியிலே விதங்கள் ஆறு கண்நோய்கள் தொண்ணூற்றாறு, பதினெட்டுக்குஸ்டம், பாண்டுவகை அஞ்சு, சன்னி பதின்மூன்று, சயம் தொண்ணூற்றாறு, குன்மங்கள் எட்டு, எண்பதாம் வாதம் என்றவாறு அவற்றின் வகைப் பாடுகளையும் சித்தமருத்துவம் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.[13]

நோயின் அறிகுறிகளைக் கொண்டு நோயை அடையாளங்காணுதல்,அதற்கான சிகிச்சை முறை, நோயாளிக்கான ஆலோசனை ஆகிய மருத்துவப்படிமுறைகளை சித்தமருத்துவம் மிகத் தெளிவாக அனுசரித்துச்சென்றிருக்கிறது. இதற்குரிய ஒரு எடுத்துக்காட்டாக நவீனமருத்துவ உலகிற்கு சவாலாக உள்ள நீரிழிவு நோயை சித்த மருத்துவம் எவ்வாறு அணுகுகிறது என்பதை எடுத்துக்காட்டலாம். நீரிழிவு நோயின் அறிகுறி பற்றி வைத்திய சிந்தாமணி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

“ நீரேஅழியும் நாளிகைதோறும்
நிரம்பக்கலயம் தனிலிட்டு
காரே இணங்கும் குழலாளே
காய்ச்சிப் பார்த்தால் பாணியதாய்
நேராய் அதுவும் இனித்திருக்கும்
நீரும் தரையில் விட்டாக்கால்
சீராய் எறும்பு ஈ மொய்க்கும்
செய்யுங்குணங்கள் செப்பக்கேள்”

என்றவாறு நாளிகைதோறும் சிறுநீர் கழிக்கும் குணம், அதைக்காய்ச்சிப்பார்த்தால் பாணிபோலாகும் தன்மை, இனிப்புச்சுவையிருத்தல், ஈஎறும்பு மெய்த்தல், ஆகிய அறிகுறிகளை விளக்கியிருக்கக் காணலாம். நீரிழிவு நோயாளர்கள் உப்பு பச்சையரிசி என்பவற்றையும் இனிப்புப்பண்டங்களையும் தவிர்க்கும்படி வைத்தியசிந்தாமணி கூறுகிறது.

"......படிக்குப்பூசை உப்பாகா பச்சையரிசி தானாகா
அடிக்கடிக்கு நீராகா ஆகாப்பண்டம் தானாகா
......மனிதர்க்குண்டா நீரிழிவே"

நீரிழிவு நோய்க்கென பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுள் ஆவாரை நாவல் கடலழிஞ்சில் மருதம்பட்டை கோஸ்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய கசாயமும் ஒன்றாகும் என்பதனை தேரையர்கசாயம்நூறு என்ற சித்தமருத்துவ நூலிலிருந்து அறியமுடிகிறது.

"ஆவிரங் கொன்றை நாவல்
அலைகடல் முத்தம் கோட்டம்
மேவிய மருதந் தோலும்
விரைந்துடன் ஒக்கக் கொண்டு......."

தேரையர்கசாயம்நூறு

**விடமுறிவு :**

விடமுறிவு பற்றியும் நஞ்சுத்தன்மையான தாவரப் பகுதிகளுக்கு விடமுறிவைத் தரக்கூடிய தாவரங்களையும் அடையாளங்கண்டு அவற்றை பின்வரும் சித்த மருத்துவப் பாடல் எதிரெதிராகப் பட்டியற்படுத்துகின்றது.

"எட்டிக்கு நாவல் இருதோன்றிக்கு தான்றிக்காய்
வட்டமுலை தாமரையாய் ஆவிரைக்கள்ளிக்கு
அலரிக்குக் கடுக்காய் நெய்தேனுக்கு வெந்தகரி
எருக்கிலைக்கு வள்ளி இயங்கும் பழமாகும்
நேர்வாளம் மிகுத்தால் நீள்வசம்பு நன்றாகும்
வேத்துச்சிவதைக்கு வெள்வேல் மிகநன்றாகும்
..........................
வெற்றிலையோடு எண்ணை விழுங்கிக் குடிப்பார்க்கு
முற்றிய தேங்காய்ப்பால் முறிக்கும் மருந்தாகும்
இத்தனையாம் நஞ்சுவகைகள் முழுதுக்கும்
ஒத்தபொது மருந்து உளவாம் அவையிரண்டே
அவுரியொடு சீந்தில் அவையென்றறிவீரே" 14

**அனுபானம்–பத்தியம் :**

சித்தமருத்துவமானது நோய்க்கான மருந்துகளை கொடுக்கும்போது தேன் பழச்சாறு போன்ற அனுபானங்களையும் சேர்த்துக்கொடுத்தல் நன்றென பரிந்துரை செய்கின்றது.

"ஊட்டடா அனுபானத்துறையோடொக்க"

அகத்தியர்காவியம்1500 – பாடல்673

மேலும் புளி உப்பு மாப்பண்டம் இறைச்சி தயிர் காரம் பெண்போகம் ஆகியன நீக்கப்பட வேண்டும் என்கிற பத்திய விதியை குறிப்பிடுகின்றபோதும் இவை நோய்க்குநோய் மாறுபடும் எனவும் குறிப்பிடுகிறது.

"நீக்கிடு புளிகசப்பு நீக்கினால் மெத்தநன்று
போக்கிலே கொள்வீராகில் பெறுப்பது வெகுநாள்செல்லும்"

**தெய்வநம்பிக்கை :**

இந்துப்பண்பாட்டு மரபின்படி சித்தமருத்துவர்களும் நெய் சிந்தூரம் எண்ணை போன்ற மருந்துவகையறாக்களைத் தயார்செய்யும் போதும் அவற்றை நோயாளிக்கு அளிக்கும்போதும் தெய்வங்களை நினைத்து பூசை செய்வது வழக்கமாகும். அம்பிகை, விநாயகர், சிவன், வைரவர் ஆகியோர் பொதுவாக சித்தமருத்துவ நூல்கள் பலவற்றிலும் இவ்வாறு பூசிக்கப்படவேண்டியவர்களாகக் கூறப்படுகின்றனர்.

"ஆயிபதம் பூசித்து அடுப்பிலேற்றே
நின்றாடும் ஈசனுக்குப் பூசைசெய்து
நனைவோடே காசெடைதான் உண்ணச் சொல்லே"

அகத்தியர்காவியம்1500 – பாடல் 500

**சத்திரசிகிச்சை :**

சித்தமருத்துவமானது அறுவைச்சிகிச்சையை அசுர வைத்தியம் என்கிறது. அகத்தியர் சஸ்திராயிதவிதி எனும்பெயரில் இன்று கிடைக்கப்பெறும் தொகுப்பொன்றில் அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படும் 26 ஆயுதங்கள் பற்றிய தகவல்கள் உள்ளன.

**கத்தி சத்திரம் கவின் குறும்பி வாங்கியும்**
**முக்கவா தன்னுடன் முள்ளுவாங்கியும்**
**ஆழிக்கோலும் அடுத்த பிறையுடன்**
**தத்தரிக்கையுடன் பகைரை வாங்கியும்**
**முச்சலாகையொடு முனிமொழியோட்டும்**
**செப்புக்கீழையும் சீரியசலாகையும்**
**வட்டகைதன்னுடன் வள்பஞ்சமுகமும்**
**செப்புச்சலாகையும் கொம்பும் குடோரியும்**
**வெங்கலக்குழலும் ஈயச்சலாகையும்**
**சாயக்கோலும் கணகத்தி தண்டும்**
**இவையிவை ஆயுதம் இருபத்தாறும்**
**சிவனவன் அருளால் திகழ் சத்திராயுதமே** 15

மேற்குறிப்பிட்ட ஆயுதங்களுள் சஸ்திரம் (சத்திரம்) என்னும் ஆயுதமே தலையாயது. ஆறங்குலநீளமும் ஆறுகளஞ்சு (33கிராம்) நிறையும் வேப்பிலை போன்ற வடிவமும் கொண்ட இது கட்டி பிளவை போன்றவற்றை அறுக்கப்பயன்பட்டதாக அறியமுடிகிறது.

**சித்தவைத்திய மூலங்கள் :**

நவநாதசித்தர் மரபுடனும் பதினெண்சித்தர் மரபுடனும் சித்தவைத்தியமானது நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது. கையளிப்புப் பாரம்பரியத்திலும் ஆவணப் படுத்தலிலும் ஏற்பட்ட குறைபாடுகளால் சித்தவைத்திய நூல்களிற் பெரும் பாலானவை இன்று எமக்குக் கிடையாதொழிந்துள்ளன. சித்தர்கள் அனைவருமே மருத்துவ ஞானமுடையவர்களாக விளங்கியிருப்பினும் அகத்தியர், திருமூலர், போகர், புலிப்பாணி, பாம்பாட்டிச்சித்தர், தேரையர், இராமதேவர், போன்ற சிலரின் படைப்புக்களே இற்றைவரை அறியப்பட்டுள்ளன.

**அகத்தியர்** - அகத்தியர் பெருந்திரட்டு, வைத்திய சிந்தாமணி, குருநாடி 235, அகத்தியர்-1500

**திருமூலர்** - திருமூலர்வைத்தியம் 600, திருமந்திரம் 1000,

**போகர்** - போகர் 7000, சிகிச்சைவெண்பா, மூப்புச்சூத்திரம்

**தேரையர்** - தேரையர் தைலவர்க்கம், வைத்தியக்காப்பியம், நோய் மருந்தளவை, மருந்துபாரதம், நோயணுகாவிதி, கஷாயம் 100, பதார்த்தகுணம் தைல வர்க்கச்சுருக்கம், நீர்நிறக்குறி

**இராமதேவர் -** வைத்திய சிந்தாமணி 700, வாதவைத்தியம் 400, செந்தூரச் சூத்திரம் 155, எடைபாகம் 16, பாம்பாட்டிச்சித்தர் - சித்தர் ஆரூடசிந்து, கருவூரார் பலதிரட்டு 300

**தமிழ் வாகடம் :**

தென்நாட்டில் ஆயர்வேத சித்தமருத்துவப் பாரம்பரியங்களின் இணைப்பாக வாகட நூல் விளங்குகிறது. வாகடர் இயற்றிய அட்டாங்கஹிருதயசம்ஹுதையின் தமிழ்மொழி பெயர்ப்பே வாகடம் என்க் கூறுவாரும் உளர். ஆயினும் இது தவறாகும். தென்னாட்டுச் சித்தமருத்துவப் பாரம்புரியத்தை உள்வாங்கித் தோன்றிய நூலாகவே இதனைக் கருதல் வேண்டும். இந்நூற்றிரட்டு கி.பி.11-13ம் நூற்றாண்டு காலப்பகுதியில் தமிழ் நாட்டில் தோன்றியதாகச் சிலர் கருதுகின்றனர். ஆயினும் இக்கருத்து சர்ச்சைக்குரியது. வடமொழி ஆயர்வேத சாஸ்திரங்களில் கூறப்படாத நாடிப்பரிசோதனை நுட்பங்கள் வாகடநூலில் விளக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

ஆயினும் தமிழ் வாகடநூலின் பெரும்பகுதி கையளிப்புப் பாரம்பரியத்தின் குறைபாடுகளால் அழிந்துபோக எஞ்சிய பகுதிகளிலிருந்து ஆங்காங்கு கிடைத்த பாடல்களைத் தொகுத்தனர்.பாடல்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அவை அகத்தியர் 500, அகத்தியர் 2000, அகத்தியர்காவியம் 1500 எனப் பெயரிடப்பட்டன. தமிழ் வாகடம் இன்று முழுமையாகக் கிடைக்கப்பெறாத போதிலும் அதனுடைய உள்ளடக்கம் எவ்வாறு அமையப்பெற்றிருந்தது என்பதற்கு பின்வரும் பாயிரப்பாடல் வரிகள் சான்றுபகர்கின்றன.

**“ பாயிரம் முதலாய்த் தானம் பஞ்சபூதத்தினோடு**
**வாயுவும் பத்துநாடி வரிசையப்படியே நாடி**
**நோய்வரும் படியசாத்யம் நுகரினிற் கஷாயம் சூர்ணம்**
**தூயலேகியம் நெய்மாத்திரை துலங்கிய**
**சொன்னதோர் தயிலம் மிக்க வடகத்தோடு**
**சுவைரசவர்க்கமலால்**
**அன்னபூ அட்டை கொம்பு அரியசத்திரத்தினோடு**
**இன்னமுங் கேளாய் ரட்சை இதுமுதல் நயனரோகம்**
**முன்னமே பெரியோர் சொன்ன முதுதமிழ் பாடல்தானே”** அகத்தியர் 2000

இதிலிருந்து பஞ்சபூதங்கள், தசவாயுக்கள், கருஉற்பத்தி, நாடிப் பரிசோதனை, நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் (நிதானம்), குணங்குறிகள் மருந்து வகைகளான கஷாயம், சூர்ணம், லேகியம், நெய்மாத்திரை, வடகம், இரசவர்க்கங்கள், ஆகியவற்றுடன் சத்திரசிகிச்சை விதி, அட்டைவிதி, கொம்புவிதி, நயனவிதி ஆகிய வழிமுறைகளையும் உள்ளடக்கிய முழுமையான மருத்துவக்கலைக்களஞ்சியமாக தமிழ் வாகடநூல் அமைந்திருந்தமையை ஊகிக்க முடியும்.

## மனித உடற்கூற்று மரபியல் - Human Genetics

பெற்றோரின் மரபுவழிப்பட்ட "பண்புகள் குழந்தைக்கு அமைதல் குறித்தும் சித்த மருத்துவம் தீர்க்கமான சிந்தனைகளைக் கொண்டிருந்தது.

**"ஏய் அங்கு அலந்த இருவர்தம் சாயத்துப்**
**பாயும் கருவும் உருவாம் எனப்பல**
**காயம் கலந்தது காணப் பதிந்தபின்**
**மாயம் கலந்த மனோலயம் ஆனதே"** (திரு.மந் 268)

அதாவது, சுக்கிலமும் சுரோணிதமும் கருவாகப் பெண்ணின் கருப்பையில் பதியும் பொழுதே ஆண், பெண் ஆகிய இருவரின் உடலில் கலந்துள்ள மாயாகாரியத் தத்துவங்களும் மனத்தின் எண்ணம் உணர்வு முதலானவையும் பதியும் என்று திருமூலர் உரைப்பார். இதனை இன்றைய மேலைத்தேய மரபணுவியல் ஆராய்ச்சிகளும் உறுதி செய்கின்றன. "**ஜீன்கள் என்பவை மரபுவழிப் பண்புக்கூறுகளைத் தாங்கிநிற்கும் அலகுகளாக குரோமோ சோன்களில் அமைந்துள்ளன. பாலணுக்களாகிய** (GAMETES) **விந்துவிலும்,** (SPERM) **அண்டத்திலும்** (OVUM) **உள்ள குரோமோசோன்களின் ஜீன்களே குழந்தையின் நிறம், அறிவு, இரத்தவகை, உடல்நிலை, மனப்போக்கு ஆகியவற்றை மரபுவழி முடிவு செய்கின்றன**". Dr. V. Kapur & Dr. R.K. Suri - Basic Human Genetics [16]

இன்றைய மருத்துவ அறிவியலின்படி ஒரு குழந்தை ஆணாகப் பிறக்கவேண்டுமா அல்லது பெண்ணாகப்பிறக்க வேண்டுமா என்று நிர்ணயிப்பவை **பால்நிர்ணய குரோமோ சோன்களாகும்.** இதில் பெண்களுக்கு எப்பொழுதுமே x குரோமோசோன்களாகத்தான் இருக்கும். ஆணிடமிருந்து வெளியேறும் கோடிக்கணக்கான உயிரணுக்களில் பாதி x குரோமோசோன்களாகவும் மீதி y குரோமோசோன்களாகவும் இருக்கும். இவற்றில் x குரோமோசனுள்ள உயிரணு பெண்ணின் x கருமுட்டையுடன் சேர்ந்தால் x x ஆகி பெண்குழந்தை உண்டாகும். Y குரோமோசோன் உள்ள உயிரணு எனின் xy ஆகி ஆண்குழந்தை உருவாகும். என்பதே இன்றைய அறிவியல் முடிவு.

**"ஆண்மிகில் ஆணாகும், பெண்மிகில் பெண்ணாகும்"**

திருமந்.287. 12

எனத் திருமந்திரம் குறிப்பிடுகின்ற செய்தி இங்கே கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. ஆண்மிகுதல் என்பதை y உள்நுழைதல் என்றும் பெண்மிகுதல் என்பதை x உள்நுழைதல் என்றும் கருத இடமுண்டு.

**நிறைவாக :**

இந்துநாகரிகம் என்ற ஆழ்ந்தகன்ற விடயப்பரப்பை வெறுமனே சமயத்தளத்தில் இருந்து மட்டுமே விளங்கிக்கொள்கின்ற அல்லது விளக்க முற்படுகின்ற முற்கற்பிதங்களை கடந்து இந்துப்பண்பாடு என்ற எண்ணக்கருவின் உண்மையான வீச்செல்லைகளைப் பற்றிய புரிதல்கள் அவசியமானதாகும். அந்தவகையில் இந்துப் பண்பாட்டின் அறிவியற் கூறுகளில் ஒன்றான ஆயுர்வேத–சித்தமருத்துவப் பாரம்பரியத்தின் மூலங்களினை அறிந்துணர்தல் இன்றியமையாததாகும்.

**உசாவியவை :**


01. ஜம்புநாதன்.எம்.ஆர் (மொழிபெயர்ப்பு) **அதர்வவேதம்.** (22ம் சூக்தம்)
ஜம்புநாதன் புத்தகசாலை,சென்னை,1940
பக் 72

02. **மே.கூ.நூ,** பக் 79

03. நஜன், **வேதமாதா,**
பிரதீபாபிரசுரம; சென்னை 1997
பக் 34

04. ஸ்ரீ ராமதேசிகன்.எஸ்.என், **சுஸ்ருதசம்ஹிதை பகுதி 2**
இந்திய மருத்துவ மற்றும் ஓமியோபதி இயக்குனர் அகம்,
சென்னை,1995, பக்

05. சந்திரா.எஸ்., **அறிவியல் முன்னோடிகள்,**
விசுபதிப்பகம்,
சென்னை.1990 பக்41-42

06. www.Hinduuniverse

07. சந்திரா.எஸ்., மே.கூ.நூ ,பக்55-56

08. தட்சணாமூர்த்தி.அ **தமிழர் நாகரிகமும் பண்பாடும்**
யாழ் வெளியீடு,
சென்னை, 2005 பக் 366

09. தட்சணாமூர்த்தி.அ
மே.கூ.நூ ,பக் 367

10. Charropadhyaya.C(ed) **Studies in the History of Science in India**
New Delhi,1987

11. Narayana swami,V **Introduction to the Siddha System of Medicine**
I.I.S.R, Delhi 1987
Page 04

12 .கோவேந்தன்,த,**பண்டையமருத்துவமும் பயன்தரு மூலிகைகளும்,**
திருமகள் நிலையம்
சென்னை,1989 பக்-73

13. மாதவன்.இரா (உரை) **அகத்தியர் வைத்திய காவியம்-1500**
தமிழ் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்,1994
பக் 70

14 கோவேந்தன்,த **மே.கூ.நூ,** பக் 93

15 கோவேந்தன்,த **மே.கூ.நூ,** பக் 89- 90

16 மலர் ,அ. **மெய் பொய்யன்று-திருமூலர், வள்ளலார்**
திபார்க்கர் வெளியீடு
சென்னை 2002.
பக் 152-153